**களிகமுவ பிரதேச சபை – 2022**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களிகமுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் களிகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின்காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூடுதலாக செலுத்தியிருந்த கடன் தவணை தொகையை கடன் மீதியிற்கு பதலீடு செய்யாததால் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் 2020 திசெம்பர் 31 திகதி மீதி ரூபா 178,795 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | காணிப் பிரிப்பினால் சபைக்கு கிடைத்த ரூபா 8,995,000 ஆக காணி, 04 பொதுக் கிணறுகள் மற்றும் மேலதி காணி மற்றும் 18 கட்டிடங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கணக்காய்வு கட்டணம் ரூபா 36,900 இனால் மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 07 தைத்தொழில்களின் பெறுமதி ரூபா 25,251,119 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அப் பெறுமதியை கணக்கீடு செயவதாக. | - மேற்படி - |
| (உ) | கடந்த ஆண்டுகளின் ரூபா 197,000 ஆன படிகள் 2022 ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பாடு வழங்காமை இதற்கு காரணமானதாக. | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக 2023 ஆண்டில் கிடைத்த ரூபா 58,850 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று 05 கணக்கு விடயங்களில் மீதி ரூபா 1,757,606 இனால் அட்டவணைகளுடன் இணங்கவில்லை. அவ்வாறே, 03 வருமான விடயங்களின் துணை ஏடுகள் பிரகார மீதி மற்றும் நிதி செயலாற்றுகை கூற்று பிரகாரம் அம் மீதிகளிற்கு இடையில் ரூபா 51,063 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக் கூற்றுக்கள், தொடர்பான மூல ஆவணங்களுடன் இணங்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 223,360 ஆன 04 கணக்கு விடயங்களிற்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காய்விற்கு தேவையான கவல்களை வழங்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கு இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | இலக்கம் 02/2010 கொண்ட சுற்றறிக்கையின் xiii பந்தி | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள்திருத்த வேண்டிய வீதவரி ஆதன மதிப்பீட்டை 2007 ஆண்டின் பின்னர் மேற்கொண்டு இருக்கவில்லை | புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 01/2010 கொண்ட சுற்றறிக்கையின் 7.4 (iv) பந்தி | 17 உறுப்பினர்கள் மருத்துவல்லாத மற்றும் உள்ளூராட்சிக்கு தொடர்பல்லாத காரணங்களிற்காக விடுமுறை பெற்று சபைக்கு வருகைதராத 38 சந்தர்ப்பங்களில் ரூபா 570,000 ஆன உறுப்பினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் மருத்துவ அறிக்கையை பெற்றுக் கொண்டு குறித்த படிகளை செலுத்துவதாக. | - மேற்படி - |
| (ஆ) | 2009 ஒக்டோபர் 07 திகதிய இலக்கம் 2/2009 கொண்ட உள்ளூராட்சி | மாதமொன்றில் செலுத்த முடியுமான இணைந்த படிகள் 06 நாட்களை | தாபனக் கோவை ஏற்பாட்டை அடிப்படையாகக் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணையாளர் சுற்றறிக்கை | விஞ்சி 2022 ஆண்டில் 58 நாட்களுக்காக இரண்டு சாரதிகளுக்கு ரூபா 40,950 ஆன இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | எடுக்க வேண்டும். |
| (இ) | 1975 இலக்கம் 01 கொண்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் சட்டம் | 21 உறுப்பினர்களால் முதலாம் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தலை வழங்கி இருக்காததுடன் 32 உறுப்பினர்களால் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான வருடாந்த வெளிப்படுத்தலை 2019 ஆண்டு முதல் 2022 வரை சமர்ப்பித்திருக்கவில்லை. | அனைத்து உறுப்பினர்களிற்கும் வருடாந்தம் மார்ச் 30 திகதிக்கு முன்னர் அவ் வெளிப்படுத்தலை ஒப்படைக்குமாறு பல விடுத்தங்களில் அறிவித்ததாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 20,703,379 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 16,415,924 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 2,333,025 | 3,784,449 | 3,275,828 | 894,361 | 2,760,395 | 2,518,601 | 2,256,024 | 729,485 |
| வாடகை | 5,094,230 | 6,663,132 | 6,659,532 | 528,746 | 4,415,000 | 5,188,019 | 6,036,752 | 647,026 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,350,000 | 1,404,544 | 1,404,544 | - | 1,025,100 | 1,304,600 | 1,285,801 | - |
| ஏனைய வருமானம் | 5,907,000 | 9,583,601 | 8,693,021 | 890,580 | 6,863,500 | 6,863,500 | 31,317,954 | - |
| | **14,684,255** | **21,435,726** | **20,032,925** | **2,313,687** | **15,063,995** | **15,874,720** | **40,896,531** | **1,376,511** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி, ஏக்கர் வரி, கடையறை வாடகை மற்றும் முத்திரை கட்டணம் ஆகிய வருமான விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதியன்று 24,442,383 தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 2,871,378 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 648,896 ஆன மீதியும் காணப்பட்டன. | இக் கூற்றுடன் இணங்குகிறேன். நிலுவை தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| பயன்படுத்தாத வாகனங்களுக்காக பயன்பாடின்றிய சான்றிதழ் ஒன்ரை இரண்டு வருடத்திற்க ஒரு முறை பெற்றுக் கொள்ளாது 2014 மறறும் 2018 ஆண்டுகள் முதல் பயன்பாடின்றி நிலவிய 02 டெக்டர்களிற்காக 2014 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை வருமான அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 8,685உம், காப்புறுதிக்காக ரூபா 113,307 உம் கொடுப்பனவு பயனற்ற செலவானது. | பயன்பாடின்றிய சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | பயன்படுத்தாத வாகனங்களை திருத்தி பயன்படுத்த அல்லது பராதீனம் சய்ெய நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த கணிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட 51 வேலைகள் மற்றும் வியாபார அலகுகள் பதிவேட்டிற்கு உள்ளடக்காததனால் நிலுவை வருமானம் ரூபா 100,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்வதாக. | பதிவேடுகள் உரியவாறு நாளாதுவரையாக் கப்பட வேண்டும. |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 21 அம் பிரிவிற்கு இணங்க 2015 ஆண்டு முதல் 2022 நவம்பர் வரை கிடைத்த 839 அபிவிருத்தி விண்ணப்பங்களில் 673 விண்ணப்பங்களிற்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொண்டு இருக்கவில்லை. எனினும், பயன்படுத்திக் கொண்டிருக்கும் அந் அபிவிருத்தி ஆதனங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக | சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ரூபா 68,922,360 ஆன கடன்படுனர் மீதினுள் 01 ஆண்டும் 05 ஆண்டும் இடைலான காலமொன்று நிலுவையாக காணப்படும் ரூபா 1,546,416 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 18,916,936 ஆன மீதியும் ஆனது. | மீண்டும் கிடைக்காது என உறுதியாகுமெனின் அம் மீதியை அகற்றுவதாக. | மீதிகளை தீர்க்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ரூபா 57,461,798 ஆன ஏனைய கடன்கொடுனர் மீதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைலான காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 2,744,777 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 2,193,128 ஆன மீதியும் ஆனது. | -மேற்படி- | -<br>-மேற்படி- |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சின் செயளாலரின் ஆலோசனை பிரகாரம் புதிய வீதி விளக்கு பொருத்தவதற்கு தேவையான அங்கீகாரமின்றி 2,745 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. | இதற்காக மின்சார பெறியியளாலர் மற்றும் கிளை முகாமையாளர் வாய் மொழி மூலம் அறிவூட்டப்பட்டதாக. | ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணி ஏலவிற்பனையொன்றில் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒப்படைக்க வேண்டிய ரூபா 4,668,000 ஆன 31.12 பர்சஸ் இனை ஒப்படைத்திருக்கவில்லை. | அந்த காணித்துண்டை அன்பளிப்பு உறுதியின் மூலம் ஒப்படைப்பதாக. | தாமதமின்றி சுவீகரிக்க வேண்டும். |
| (இ) | பதிவு செய்த 11 முச்சக்கர வண்டி சங்கங்களின் 301 அங்கத்தவர்களிடம் இருந்து 2022 நவம்பர் 30 திகதியன்று ரூபா 124,000 நிலுவையாகக் காணப்பட்டது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்து வாகன தரிப்பிடத்தை அமைத்து கட்டணம் அறவிடுவதாக. | வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்தவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டின் போது கிடைத்த ரூபா 2,000,000 ஆன கம்பெக்டர் டெலர் ஒன்று கிடைத்த திகதி முதல் விளைவற்று நிலவியது. | அதைனை டெக்டருடன் இணைக்கும் கடினத்தின் மீது பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை என. | சொத்துக்களை பயன்பாடின்றி வைக்கக் கூடாது. |
| (ஆ) | 2019 ஆண்டில் கிடைத்த ரூபா 6,221,373 ஆன கம்பெக்டரை சுவீகரித்திற்கொள்ள அல்லது திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | அதன் உடமையை ஒரு நாள் சேவையின் ஊடாக மேற்கொள்வதாக. | தாமதமின்றி சுவீகரித்திற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான ரூபா 1,750,000 ஆன 02 வாகனங்கள் 2013 ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டன. | சபை தீர்மானத்தின் பிரகாரம் திருத்த வேண்டிய போதும், உதிரிப்பாகங்கள் தட்டுப்பாட்டினால் அது முடியாமலிருப்பதாக. | தாமதமின்றி திருத்தம் செய்ய வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 வெற்றிடங்கள் 2019 ஆண்டு முதல் காணப்பட்டன. இதனால் 51 பிரிவுகளுடன்கூடிய மொத்த அதிகார பிரதேசத்தையும் ஒரு வருமான பரிசோகரிற்கு மேவுகை செய்ய வேண்டியிருந்தது. | வெற்றிடங்களிற்காக அறிவித்தல் செய்துள்ளதுடன், வெற்றடங்களை நிரப்புவது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாட்பட்ட விடயம் என. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 09 அலுவலர்களிடமிருந்து பிணை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | பிணை பெற்றுக்கொள்ள வேண்டும். |